# மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொன்னேரி.

## அ.வ.எண். 188/2012

இந்நீதிமன்றத்து எழுத்தர் திருமதி. G. செல்வி, மூன்றாம் நிலை எழுத்தர் அவர்களால் சத்திய பிரமானம் செய்விக்கப்பட்டு வாதி / பிரதிவாதி தரப்பு சாட்சி வாக்கு மூலம் 1873 ஆம் ஆண்டு 10-வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2024 ஆண்டு ஆகஸ்ட் மாதம் **22** -ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

**தேதி - 22.08.2024**

**பெயர் - குப்பு சாமி**

**த/பெ - தணிகாச்சலம்**

**சாட்சி - PW1**

**வயது - 75**

**ஊர் - கல்பாக்கம்**

**தொழில் - ஓய்வு**

**விசாரணை தொடங்கும் நேரம்- 03.06. p.m.**

**முதல் விசாரணை**

1. நான் இவ்வழக்கின் வாதியாவேன். எனது வாக்குமூலம் பிரமான பத்திரம் மூலம் முதல் விசாரணை சாட்சியம் அளிக்கிறேன். அதில் உள்ள சங்கதிகள் அனைத்தும் எனக்கு தெரியும் அதில் உள்ள கையொப்பம் என்னுடையது. எனது வழக்கிற்கு ஆதரவாக கீழ்க்கண்ட ஆவணங்களை தாக்கல் செய்கிறேன்.

2. (1). 10.11.1997 தேதியிட்ட செட்டில்மெண்ட் பத்திரம் ஆவண எண் 3043/1997 என சார்பதிவாளர் பொன்னேரி அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டதன் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ1** எனவும்.

(2). 05.07.2000 தேதியிட்ட ஜெனரல் பவர் பத்திரம் ஆவண எண் 748/2000 என சார்பதிவாளர் திருவொற்றியூர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டதன் சான்றிட்ட நகல்

**வா.சா.ஆ2** எனவும்.

(3). 06.12.2000 தேதியிட்ட கிரையப்பத்திரம் ஆவண எண் 3520/2000 என சார்பதிவாளர் பொன்னேரி அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டதன் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ3** எனவும்.

(4). 17.11.2001 தேதியிட்ட கிரையப்பத்திரம் ஆவண எண் 84/2001 என சார்பதிவாளர் பொன்னேரி அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டதன் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ4** எனவும்.

(5). 31.05.2002 தேதியிட்ட பொது அதிகார ரத்துப்பத்திரம் ஆவண எண் 704/2002 என சார்பதிவாளர் திருவொற்றியூர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டதன் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ5** எனவும்.

(6). 02.03.2007 தேதியிட்ட கிரையப்பத்திரம் ஆவண எண் 2474/2007 என சார்பதிவாளர் பொன்னேரி அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டதன் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ6** எனவும்.

(7. 02.03.2007 தேதியிட்ட கிரையப்பத்திரம் ஆவண எண் 2473/2007 என சார்பதிவாளர் பொன்னேரி அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டதன் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ7** எனவும்.

(8). இரண்டாம் வாதியான எனது பெயரில் உள்ள பட்டா, பட்டா எண் 87 அசல் **வா.சா.ஆ8** எனவும்.

(9). தாவா சொத்திற்குண்டான வில்லங்க சான்றிதழ் 16.08.2012 தேதியிட்டது 01.01.1987 முதல் 03.12.2012 காலத்திற்கானது அசல் **வா.சா.ஆ9** எனவும்.

(10). தாவா சொத்திற்குண்டான வில்லங்க சான்றிதழ் 20.09.2012 தேதியிட்டது 01.01.1987 முதல் 03.09.2012 காலத்திற்கானது அசல் **வா.சா.ஆ10** எனவும்.

**(குறுக்கு விசாரணை செய்ய வேண்டுகோளுக்கு இணங்க ஒத்திவைக்கப்படுகிறது).**

**விசாரணை முடியும் நேரம்- 03.26.p.m.**